செ.வெ.எண்:18 நாள்:10.01.2017

# அரியலூர் மாவட்டத்தில் பொங்கல் திருநாளையொட்டி சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பு 2,08,986 குடும்ப அட்டைத்தாரர்களுக்கு வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்டம், **காட்டுப்பிரிங்கியம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில்** தமிழ்நாடு அரசின் உத்தரவின்படி, குடும்ப அட்டைதாரர்களுக்கு **“சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பு”** வழங்கும் நிகழ்ச்சி அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் முன்னிலையில் இன்று (10.01.2017) நடைபெற்றது.

ஜெயங்கொண்டம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

**இந்நிகழ்ச்சியில், அரசு தலைமை கொறடா அவர்கள் பேசியதாவது :-**

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகையை சீரும் சிறப்பாகவும் கொண்டாட தமிழ்நாடு அரசு பொது விநியோகத் திட்டத்தில் பயன்பெறும் **ரூ.1.80 கோடி** அரிசி பெறும் குடும்ப அட்டைத்தாரர்களுக்கு பொங்கள் பரிசுத் தொகுப்பினை அறிவித்துள்ளார்கள். அதன்படி, பொதுவிநியோகத்திட்டத்தின் கீழ் அரிசி பெறும் **1,87,96,375** குடும்ப அட்டைத்தாரர்களுக்கும், **64,751** காவலர் குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கை வாழ் அகதிகள் முகாமில் உள்ள **19,543** இலங்கை வாழ் தமிழர்களுக்கும் பொங்கல் பரிசுத்தொகுப்பினை அறிவித்துள்ளது.

இதில், பொங்கல் பரிசுத்தொகுப்பில் **1 கிலோ பச்சரிசி, 1 கிலோ சர்க்கரை, 2 அடி நீளக் கரும்புத் துண்டு, 20 கிராம் முந்திரி, 5 கிராம் ஏலக்காய்** அடங்கிய **“சிறப்புப் பொங்கல் பரிசுத்தொகுப்பு”** வழங்கப்படவுள்ளது. இந்த வகையில் தமிழகத்தில் செயல்படும் 34,000-க்கு மேற்பட்ட பொதுவிநியோகத் திட்ட அங்காடிகளில் 18,000 மெ.டன் பச்சரிசி, 18,000 மெ.டன் சக்கரை ஆகியன மாதந்தோறும் வழங்கப்படும் அத்தியாவசிய பொருட்களுடன் சேர்த்து கூடுதலாக வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்குவது தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் தொடர்ந்து சீரும் சிறப்புமாக வழங்கப்பட்டு வருகிறது. அந்த வகையில் 2017ஆம் ஆண்டு பொங்கல் பண்டிகையை தமிழர்கள் கொண்டாடும் வகையில் பெரிய அளவில் நிதி ஒதுக்கீடு செய்து அனைத்து குடும்ப அட்டைத்தாரர்களுக்கும் சிறப்பாக பயனடைய அறிவிப்பினை வழங்கியுள்ளது. எனவே, அனைவரும் பயனடைந்து பொங்கல் பண்டிகையை கொண்டாடிய வேண்டும் என அரசு தலைமை கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்.

**இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசியதாவது:-**

அரியலூர் மாவட்டத்தில் பொங்கல் திருநாளை முன்னிட்டு தமிழக அரசு சார்பில் **“சிறப்புப் பொங்கல் பரிசுத்தொகுப்பு”** வழங்கப்படவுள்ளது. பொங்கல் திருநாளை மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், காவலர் அட்டைதாரர்கள் மற்றும் முகாம்களில் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் ஆகியோருக்கு சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கப்படும். இதன் முதற்கட்டமாக காட்டுப்பிரிங்கியத்தில் 562 குடும்ப அட்டைதாரர்களுக்கு **சிறப்பு பொங்கல் பரிசுத்தொகுப்பு** வழங்கி துவக்கி வைக்கப்பட்டுள்ளது. அரியலூர் மாவட்டத்தில் செயல்படும் 440 பொதுவிநியோகத்திட்ட அங்காடிகளில் அரிசி பெறத் தகுதிவாய்ந்த குடும்ப அட்டைகள் 2,08,513, காவலர் அட்டைதாரர்கள் 473 ஆக மொத்தம் 2,08,986 குடும்ப அட்டைதாரர்களுக்கு **“சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பு”** வழங்கப்படவுள்ளது. ஏழை எளிய சாமானிய மக்கள் பொங்கல் பண்டிகையை சீரோடும் சிறப்போடும் கொண்டாட இது வழிவகுப்பும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ் இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், இணைப்பதிவாளர் கூட்டுறவுத்துறை திரு.தயாலன், துணைப்பதிவாளர் (பொ.வி.தி) திரு.செல்வராஜ், காட்டுப்பிரிங்கியம் தொடக்க வேளாண்மை கூட்:டுறவு சங்க தலைவர் திரு.கந்தசாமி, திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஜீவாரெங்கநாதன், திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.வேலுசாமி மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.